
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 1 | அக்டோபர் 1988 | இதழ் 10

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30 — 11-00—காலை ஆராதனை

,, : ,, 11-00 — 12-00—ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15 — 8-30—மாலை ஆராதனை

செவ்வாய் : மாலை 7-15 — 8-30—ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)

புதன் : மாலை 5-30 — 7-00—சகோதரிகள் ஐக்கியக் கூட்டம் (ஒருவாரம் விட்டு ஒரு வாரம்)

வியாழன் : மாலை 7-15 — 8-30—வேதாகம ஆய்வு

சனி : மாலை 7-00 — 9.00—மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


கர்த்தர் தம்முடையவர்களை அறிவார். 1

கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியும் 6

பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு 11

இயேசுவின் அன்பின் பரிமாணங்கள் 14

கேளுங்கள்-தேடுங்கள்-தட்டுங்கள் 19

நீங்கள் சரியான காரணத்திற்காக ஞான முழுக்குப் பெற்றீர்களா? 22

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமா-யிருக்கிறது சங். 119:105 25

# THIRUMARAI AASAAN

**Editor:**
**J. C. CHOATE**

**Managing Editor:**
**E. Z. SELVANAYAGAM**

**Published by Church of Christ**
**2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 1 October 1988 Issue 10

**ஆசிரியவுரை**

## கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்.

ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது; *கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக் கடவன் என்பதும் அதற்கு முத்திரையாயிருக்கிறது* என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல், 2 தீமோ 2:19

இந்த வசனத்தில் பல சிறந்த உண்மைகள் அடங்கிக் கிடக்கின்றன. ஆனால் நாம் இப்பொழுது சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப் போவது கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் என்பதே. ஒருவன் தானாகவே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சேர்ந்து கொள்ள முடியாது. கர்த்தருடைய ஆலோசனையின்படி யார் எல்லாம் கீழ்ப்படிந்து, இயேசுவைக் கர்த்தர் என்று ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களைக் கர்த்தரே சபையில் சேர்த்துக் கொள்கிறார் என்று பல சந்தர்ப்பங்களில் நாம் சுட்டிக் காட்டியிருக்கிறோம். கர்த்தர் உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தேகோஸ்தே நாளில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு முதன் முறையாக சுவிஷேசம் பிரசங்கிக்கப்பட்ட பொழுது "அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள். அப் 2:41. யாரால் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள்? வசனம் 47 கூறுகிறது 'இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார்.'

ஒரு தனி மனிதனோ அல்லது குழுவோ—அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் தங்களையோ அல்லது வேறொருவரையோ சபையில் சேர்த்துக் கொள்ள முடியாது என்று நாம் கூறுவதற்கான காரணம் என்னவெனில்; அவர்கள் சம்பந்தப் பட்டவர்களுடைய வெளித்தோற்றத்தையும் அவன் செய்கையையும் தான் பார்க்க முடியுமேயன்றி அவனுடைய உள்ளத்தைப் பார்த்து அவன் உண்மை-யாகவே விசுவாசிக்கிறானா இல்லையா என்று தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் கர்த்தருக்கு அது முடியும் 1 சாமு 16:7; லூக் 16:15 அப் 1:14. அதனால்தானோ என்னவோ ஒருவனைச் சபையில் சேர்த்துக் கொள்வதா வேண்டாமா? என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தைக் கர்த்தர் மனிதர்களுக்குக் கொடுக்கவில்லை.

ஆனால் வேதாகமம் சொல்லுகிற தெளிவான உண்மைகளில் பலவற்றை நாம் அசட்டை செய்வதைப் போலவே சபையில் ஒரு-வரை சேர்த்துக் கொள்ளுகிற விஷயத்திலும் நாம் தேவனுடைய ஆலோசனையை மீறி, ஒருவன் கர்த்தருக்குப் பிரியமானவனா? இல்லையா? என்று தெரியாமலேயே சபையில் சேர்த்துக் கொள்கிறோம். வேத வசனத்தின்படி நம்மால் காணமுடிகிற வெளிப்புற செயல்பாடுகளை நிறைவேற்றி விட்டபடியால், கர்த்தருடைய சித்தத்துக்கு இசைவாக விசுவாசித்தும் இருப்பான் என்று அனுமானம் செய்து கொண்டு அவனோடு கூட ஐக்கியமும் வைத்துக் கொள்ளுகிறோம். ஆனால் கர்த்தருக்கு தங்களுடையவர்கள் இன்னார் என்றும் யார் இல்லை என்றும் தெரியும். அதுபோல் நம்முடைய பரமபிதாவும், யாருடைய ஜெபத்துக்குச் செவி கொடுத்து யாரை ஆசீர்வதிக்க வேண்டும் என்றும் அறிவார். எப்படி ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளைகள் யார் என்றும், அந்நியப் பிள்ளைகள் யாரென்றும் அறிவானோ அதே போன்று பரம பிதாவும், மனுக்குலத்தோடு தொடர்பு கொள்ளும்போதும் அடை-யாளம் கண்டுகொள்வார் அதற்கேற்றாற்போல் எல்லார் மேலும் தம்-முடைய ஆசீர்வாதத்தைப் பொழிந்து விடாமலும் எவர் ஜெபித்தாலும் கேட்டுக்கொண்டு பதில் அளிக்காமலும் தம்முடைய பிள்ளைகளின் விண்ணப்பங்களை மட்டுமே கேட்பார் என்று அறிவோமாக. கர்த்த ருடைய பிள்ளைகள் கூட தவறு இழைத்து விட்டால் அவருடைய முகம் அவர்களுக்கு விரோதமாக இருக்கும் என்று வேதம் கூறுகிறது 1 பேதுரு 3:12.

எபிரேய நிருப ஆசிரியர் கர்த்தர் தாம் நேசிக்கிற பிள்ளைகளைச் சிட்சிப்பதை (சீர்திருத்துவதற்காக கொடுக்கப்படும் சிறுதண்டனை) குறித்து கீழ்வருமாறு எழுதுகிறார். ‘அன்றியும் என்மகனே கர்த்த’ ருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே. அவரால் கடிந்து கொள்ளப் படும்போது சோர்ந்து போகாதே.

கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்

என்று பிள்ளைகளுக்குச் சொல்லுவது போல் உங்களுக்குச் சொல்லுகிற புத்திமதியை மறந்தீர்கள்.

நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாக இருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ.

எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்களே.

அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க நாம் பிழைக்கத் தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாக அடங்கி நடக்க வேண்டுமல்லவா?

அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்ச காலம் சிட்சித்தார்கள். இவரோ நம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட்சிக்கிறார்.

எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியான சமாதான பலனைத் தரும்" எபி 12:5-11.

உலகப் பிரகாரமாக ஒரு தகப்பன் ஊரில் இருக்கிற பிள்ளைகளையெல்லாம் திருத்துவதற்கு முயற்சிப்பதில்லை. தம்முடைய பிள்ளைகளைத் தான் திருத்துகிறார். ஏனெனில் அவனுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி அவனுக்கு அக்கறை இருக்கிறது. சிட்சை என்று வரும் போது எவருக்குமே அது மகிழ்ச்சியைத் தருவதில்லை. ஆனால் அது பின்னர் நன்மை தரும்; அதே விதமாக நம்முடைய பரமபிதாவும் தம்முடைய பிள்ளைகளைச் சிட்சிக்கும் போது முதலில் அவர்களுக்கு கொஞ்சம் துக்கத்தைக் கொடுத்த போதிலும் முடிவில் நன்மையைத் தருகிறது.

கர்த்தருக்குச் சொந்தமான பிள்ளைகளுக்கும் அப்படி இல்லாதவர்களுக்கும் முடிவில் கிடைக்கும் பலன்களில் உள்ள வித்தியாசத்தைக் கவனித்துப் பார்த்தால் தற்போது ஏற்படும் சிரமங்களைப் பற்றி ஆயாசப்படமாட்டோம். தேவனுக்குச் சொந்தமான பிள்ளைகளைத் தன்னிடத்தில் அழைத்துக் கொள்வதற்காக கிறிஸ்து ஒரு நாளைக்குத் திரும்ப வருவேன் என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். 'உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன்' யோவான் 14: 1-3.

மேற்சொன்ன காரியங்கள் நியாயத் தீர்ப்பு நாளில் எவ்விதமாய் நடந்தேறும் என்பதை விளக்கும்போது, 'பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி; கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவர்கள் அல்ல;

அந்நாளில் அநேகர் என்னை நோக்கி, ,கர்த்தாவே, கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.

அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்வேன்' என்கிறார் இயேசு மத் 7;21-23.

என் அன்பு நண்பனே, சகோதரியே! இந்த உலக வாழ்வின்போது எப்படி கர்த்தர் தம்முடையவர்களை அறிந்திருந்தாரோ அப்படியே நியாயத் தீர்ப்பு நாளிலும் அறிந்திருப்பார் என்பதற்கு மேலே சொன்ன வசனம் சான்று பகருகிறது. அவர்களுடையவர்கள் அல்லாதவர்களும் அல்லது அவர்களுடையவர்கள் என்று சொல்லிக் கொண்டு அவருக்குப் பிரியமில்லாமலும் உண்மையில்லாமலும் நடந்து கொள்பவர்களும், நீதிமான்களோடு கலந்து கொண்டு பரலோகத்திற்குள் பிரவேசித்து விட முடியாது. துன்மார்க்கர்களும், அவிசுவாசிகளும், தங்களுடைய சுயநீதியை நம்பியிருந்தவர்களும் சரியாக அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு நித்திய நரகத்துக்குள் தள்ளப்படுவார்கள். மத்: 25:46

உங்கள் நிலை என்ன? நீங்கள் உண்மையாக அவருடைய சித்தத்தின்படியெல்லாம் வாழ்ந்த தேவ பிள்ளையா? தேவனை உங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து விசுவாசித்தீர்களா? அப் 8:37, 38; ரோமர் 6:17, 18. கர்த்தருக்கு நிச்சயமாய் உங்களைத் தெரியும், ஏன் உங்களுக்கும் தெரிந்துதானே இருக்கும்! நீங்கள் தேவனுடைய பிள்ளை என்று சொல்லிக் கொண்டு அவ்விதமாய் முழு மனதுடன் கீழ்ப்படியாமல் இருந்தால் அதை இப்பொழுது கூட திருத்திக் கொள்வதற்கு வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. அப் 19:3-5., அதே போல்

தேவனுடைய பிள்ளைகள் அல்லாதவர்களுக்கும் கூட அதேபோல் இப்பொழுதும் சந்தர்ப்பம் உண்டு. ஒருவேளை நீங்கள் சன்மார்க்கராகக் கூட இருக்கலாம் அப் 10:1-2. கர்த்தருடைய ஆலோசனையின்படி அவருக்குக் கீழ்ப்படியாமல் இருந்தால் அவரால் இரட்சிப்புப் பெற, அவரால் கர்த்தருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்பட உங்களை அன்புடன் அழைக்கிறோம். மாற்கு 16:16; மத் 10:32; அப் 2:38;2:47

இன்னும் பலர் தாங்கள் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு வேதாகமத்தில் காணப்படாத - மனிதனால் உருவாக்கப்பட்ட பல்வேறு ஸ்தாபனங்களைச் சபை என்று கூறிக் கொண்டு சத்திய வேதம் கூறுத பல காரியங்களை ஆசாரங்களாகவும் உபதேசங்களாகவும் போதிப்பதைக் கேட்டுக்கொண்டு ஏமாந்து திரிகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு ஓர் அன்பான அறிவுரை. மனிதர்கள் எதை எதையோ பேசலாம், போதிக்கலாம். முடிவில் நம் அனைவரையும் நியாயம் தீர்ப்பது எது என்று வேதாகமம் கூறுகிறது? அவருடைய வசனம் தான யோவான 12:48.

கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் என்பதை மறவாதீர்.

ஜே. ஸி. சோட்

## மனமாற்றம் இல்லாத மதமாற்றத்தால் பயனில்லை.

வெளிவேடக் கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில் ஒருவனை மதம் மாற்றுவதற்காக நாடும் கடலும் சுற்றி அலைகிறீர்கள். அவன் உங்கள் மதத்தைத் தழுவிய பின் உங்களை விட இருமடங்கு அவனை நரகத்துக்கு உரியவனுக்குகிறீர்கள்.

## கிறிஸ்தவத்தின் நந்திகள்

வெளிவேடக் கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில் மனிதர் விண்ணரசில் நுழைகையில் வாயிலை அடைத்து விடுகிறீர்கள். நீங்களும் நுழைவதில்லை; நுழைவோரையும் விடுவதில்லை.

## கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்கும் வித்தைக்காரர்கள்!

வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில் நீங்கள் புதினு, வெந்தயம், சீரகம் ஆகியவற்றில் தசமபாகம் செலுத்துகிறுர்கள். ஆனுல் நியாயப்பிரமாணத்தின் முக்கிய படிப்பினைகளான நீதி, இரக்கம், விசுவாசம் ஆகியவற்றை விட்டு விடுகிறீர்கள்.

# கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியும்

கிறிஸ்தவ மக்களை அதிகமாக குழப்பத்தில் ஆழ்த்தும் விஷயங்களில் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய போதனையும் ஒன்று. தெரிந்தோ தெரியாமலோ அவரைப் பற்றிப் பலவிதமான முரண்பாடான கருத்துள்ள போதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. அவைகள் சத்திய வசனங்களை அடிப்படையாகக் கொண்டிராமல் மூடநம்பிக்கைகளின் அடிப்படையில் அமைந்து விடுவது கவலை தரும் அம்சம். நம்முடைய நாட்டில் முனிவர்கள் ரிஷிகள் என்று புராணங்களில் படிக்கிறோமே அந்த பாணியில், வரம் பெற்ற ஊழியர், வல்லமையான ஜெபம் என்றெல்லாம் எதைஎதையோ கூறி பாமரமக்களின் அப்பாவித் தனத்தைப் பயன்படுத்திக் கொண்டு மலிவான விளம்பரங்களைப் பெற்று முடிந்தால் வசதிகளையும் பெருக்கிக் கொண்டு உலா வருகின்றனர். இவர்களுடை சுயநலத்தால் இடறிப்போகிற ஆன்மாக்களின் எண்ணிக்கையை நினைத்தால் கவலைப்படாமல் இருக்க முடியவில்லை. கிறிஸ்தவம் மூட நம்பிக்கைகள் நிறைந்தது என்று சிந்திக்கத் தெரிந்த மக்கள் எண்ணி அதன் சிறப்பை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். மூன்று நூற்றாண்டுகள் பாடுபட்டும் இந்திய மக்கள் தொகையில் மூன்று விழுக்காட்டுக்கு மேல் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியாததற்கு இதுவும் ஒரு காரணம். கிறிஸ்தவ அறம் தழைக்க வேண்டும் என்று விரும்பும் சான்றோர்கள்பரிசுத்த ஆவியானவரைக் குறித்துத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். எபேசுப் பட்டணத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதின நிருபத்தில் பவுல் அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி சிலகருத்துக்களைக் கூறியிருக்கிறார். அவைகள் நம்முடைய குழப்பங்கள் சிலவற்றைப் போக்க உதவியாக இருக்கும், சிந்திப்போம்!

நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்பதற்கு நாம் விசுவாசிகளான போது பரிசுத்த ஆவியினால் முத்திரை குத்தப்பட்டிருக்கிறோம்எபே 1:13

ஆதிகாலத்தில் அரசர்கள் தங்கள் உடமைகளையும் தஸ்தாவேஜுகளையும் முத்திரை குத்தி தங்கள் உரிமைகளை நிலை நாட்டுவார்கள். ஒரு தஸ்தாவேஜு அரசால் முத்திரை குத்தப்பட்டிருந்தால் அதற்கு ஒரு அந்தஸ்து உண்டாகிறது. அப்பொருள் அரசனுக்குச் சொந்தம் என்று பொருள். அதே போன்று ஒருவன் மீது பரிசுத்த ஆவியின் முத்திரை குத்தப்பட்டிருக்கிறது என்றால் அவன் தேவனுக்குச் சொந்தம் என்று அர்த்தம். மேலும் அதே நிருபம் 1:14 ல் அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்-

சாரமாயிருக்கிறார். என்கிறது. ஒரு பொருளை வாங்குபவர் அச்சாரம் (முன்பணம்) கொடுத்து அந்தப் பொருளின்மீது தம்முடைய உரிமையை நிலை நாட்டுகிறார்.

நித்திய வீடாகிய பரலோகத்தில் நமக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் மாளிகைக்கு முன்பணமாக (அச்சாரம்) நாம் தேவனுக்குச் செலுத்துவதற்கு நம்மிடத்தில் ஒன்றும் இல்லை. ஆகவே அவர் தம்முடைய பிள்ளைகளின் சார்பில் தானே அதற்குரிய தொகையைச் செலுத்துவேன் என்று பரிசுத்த ஆவியானவரை அச்சாரமாகக் கொடுத்திருக்கிறார். ஆக, யார் எல்லாம் விசுவாசித்து மனந்திரும்பி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பெயரால் ஞானஸ்நானம் (திருமுழுக்கு) பெற்று இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் இந்த பரிசுத்த ஆவியின் வரம் கொடுக்கப்படுகிறது. அப் 2:38

தேவனால் கொடுக்கப்படும் இத்தெய்வீக அச்சாரம் திருவசனம் சொல்லுகிறபடி அவருடைய ஆவிக்குரிய பிள்ளைகளாக மாறுபவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. அதைக் கலாத்திய சபைக்கு எழுதின நிருபத்தில் உறுதிப்படுத்துகிறார். 'மேலும் நீங்கள் புத்திராக இருக்கிறபடியால், அப்பா, பிதாவே என்று கூப்பிடத்தக்தாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இதயங்களில் அனுப்பினார்' என்கிறார் கலா 4:6

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய மகிமை (Shekinah) பிரசன்னமாயிருப்பதற்கு அடையாளமாக எருசலேமில் இருந்த தேவாலயத்தின் மீது அது பிரகாசிக்கும்என்று நாம் வாசிக்கிறோம். ஆனால் புதிய ஏற்பாடு, கிறிஸ்தவர்களுடைய இதயமே தேவனுடைய ஆலயமாயிருக்கிறது என்றும் அதில் பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்கிறார் என்றும் கூறுகிறது 1 கொரி 6:19

## 2. தேவனுடைய பிள்ளைகளுக்குப் பரிசுத்த ஆவியானவர் சில ஆசீர்வாதங்களைத் தருகிறார் என்பது மெய்யே

ஆனால் அதற்கு சிலர் சொல்லுகிற மாதிரி அற்புத அடையாளங்கள் செய்யும் ஆற்றல் என்று பொருளல்ல. அந்த ஆசீர்வாதம், ஆதியில் இரண்டு வழிகளில் கிடைத்தன. 1.பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் (2) அப்போஸ்தலர்கள் பிறர் மீது கை வைத்தல். அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் வந்தபொழுது அவர்கள் வல்லமை பெற்றார்கள். அப் 1:8. மற்றவர்கள் இந்த ஆவிக்குரிய வரங்களைப் பெற்றுக்கொள்ள அப்போஸ்தலர்கள் அவர்கள் மீது கை வைக்க வேண்டியிருந்தது. அப் 8: 14-17. ஆனால் இந்த இரண்டு முறையுமே தற்காலத்தில் கிடையா. அப்போஸ்தலர்கள் காலத்தில் அவர்கள் பிரசங்கித்தவைகள் தேவனுடைய ஆலோசனைதான் என்பதை உறுதிப்படுத்தவே அவைகள் தரப்பட்டிருந்தன. மாற்கு 16:20

இப்பொழுது புதிய ஏற்பாடு நமக்குக் கொடுக்கப்பட்டு அவைகள் அனைத்தும் தேவனுடைய வசனங்கள்தான் என்று சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணம் ஆகி விட்டபடியால் இனிமேல் அத்தகைய அற்புத அடையாளங்கள் தேவையற்றது, தற்காலத்தில் அப்படிப்பட்ட வரங்கள் எங்களுக்கும் உண்டு என்று மார்தட்டுபவர்கள் என்னத்தை நிரூபிக்க முயற்சிக்கிறார்கள்? தாங்களும் அப்போஸ்தலர்களுக்குச் சமமானவர்கள் என்று கூறும் இந்த நபர்கள் தங்கள் கூற்றை மெய்ப்பிக்க தண்ணீர் மீது நடந்து காட்டுவார்களா? இறந்து போனவனை உயிரோடு எழுப்புவார்களா? சாவுக்குரிய விஷத்தை அருந்துவார்களா? விஷப்பாம்பால் தீண்டப்பட்டும் சாகாமல் இருப்பார்களா? சிந்தித்துப் பாருங்கள்.

இயேசு வாழ்ந்த நாட்களில் கூட அடையாளங்களையும் அற்புதங்களையும் கண்டுதான் விசுவாசிப்போம் என்று சொன்னவர்களைக் கண்டிக்கிறார். யோவான் 4:49 அப்படியிருக்கும் போது இன்றைக்கு இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று பலமாய் நிரூபிக்கப்பட்டு (ரோமர் 1:5) வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவி-யால் அருளப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டு (2 தீமோ. 3:16 2 பேதுரு1:22) பல நூற்றாண்டுகளாகியும் இன்னும் அற்புத அடை-யாளங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது சரியான விசுவாசத்திற்கு உகந்ததா?

பரிசுத்த ஆவியானவர் இன்றைக்கும் நமக்கு சில வரங்களைத் தருகிறார் என்பதில் சந்தேகமில்லை. அவருடைய ஒத்தாசையினாலே உள்ளான மனுஷன் பலப்பட முடியும். எபே 3.16 நம்முடைய பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். தேவனுடைய சித்தத்தின்படி ஜெபம் செய்வது எப்படி என்று தெரியாமல் தவிக்கும் போது அவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார். ரோமர் 8;26, தேவ அன்பு நமக்குள் ஊற்றப்பட்டிருப்பதே பரிசுத்த ஆவியானவரால்தான், (ரோமர் 5:5) பரிசுத்த ஆவியானவரின் உதவியினால்தான் அன்பையும் அவர் நமக்குத் தந்திருக்கிற அனைத்தையும் நாம் தெரிந்துகொள்ளும் வகையில் வேத எழுத்துக்களை நாம் பெற்றிருக்கிறோம். 2 பேதுரு 1:21, அப்படியில்லா-மல் போனால் நாமும் எபேசு பட்டணத்து விசுவாசிகளைப் போல பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டாமோ இல்லையா எதை தெரியா-மல் அல்லவா இருந்திருப்போம்? அப் 19,2. தேவனுடைய வசனம் ஆவியின் பட்டயம். எபே 6:17 அதை கொண்டுதான்அவர் செயல்படு-கிறார். பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட வசனம்தானே நம்மு-டைய கொடிய துர்க்குணத்தையும், அழுக்கையும் ஒழித்து விட்டு நம்முடைய ஆத்துமாக்களை இரட்சிக்கிறது. யாக் 1:21.

சபை எப்படி உருவாகி வளர்ந்தது என்பதை நமக்கு அறிவிக்கும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிற இரட்சிக்கப்பட்டவர்களுடைய பட்டியலைப் பார்த்தீர்களானால் அவர்கள்

அனைவரும் தேவனுடைய வசனத்தைக் கேட்டு மனம்மாறி சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்தவர்கள் என்றே வாசிக்கிறோம். அப்போஸ்தலன் பவுல் என்று பின்னர் பெயர் பெற்ற தர்சு பட்டணத்துச் சவுலையே எடுத்துக் கொள்ளுங்கள். அவர் கர்த்தரை முகமுகமாகப் பார்த்தவர். இருப்பினும் அவர் கூட சுவிசேஷகன் அனனியா வந்து சுவிசேஷத்தை அறிவித்த பிறகுதான் எழுந்து போய் ஞானஸ்நானம் பெற்று இரட்சிப்பை அடைய முடிந்தது. அப் 22:16. சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதைக் கேட்ட லீதியாளின் இருதயத்தை திறந்த மாதிரிதான் இன்றைக்கு ஒவ்வொருவருடைய இருதயத்தையும் கர்த்தர் வசனத்தைக் கொண்டு திறக்கிறார் அப் 16:14. சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போதுதான் உங்கள் பாவமும் கழுவப்படுகிறது. ஆக்வே இவைகள் அனைத்தும் பரிசுத்த ஆவியானவரால் நாம் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களே.

**3. பரிசுத்த ஆவியானவர் இன்றைக்கு ஒருவருக்குமே புதிய புதிய வெளிப்பாடுகளைத் தருவதில்லை.**

இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் சகல சத்தியத்துக்குள்ளும் நடத்தப்படுவார்கள் என்று இயேசு தாமே கூறியிருக்கிறார் போவான் 16:13. அப்போஸ்தலன் யூதா, "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம்" என்கிறார். யூதா 3, "எக்காலத்துக்கும் நிலைத்திருக்கும்படி இன்ற மக்களுக்கு அன்று அருளப்பட்ட விசுவாசம் என்று திருத்திய மொழிபெயர்ப்புக் கூறுகிறது. தேவனுடைய வசனங்கள் மனிதர்களை எல்லா நற்கிரியைகளையும் செய்யத் தகுதியுள்ளவர்களாக்குகிறது. அவைகள் உபதேசத்துக்கும் கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிப்பதற்கும் போதுமானவைகள் என்கிறது. 2 தீமோ 3: 16, 17. 'வாழ்க்கைக்கும் தேவபக்திற்கும் வேண்டியவைகள் அனைத்தும்' தேவனுடைய வசனங்களில் அடங்கியிருப்பதாகக் கூறுகிறது 2 பேதுரு 1:3. தேவனுடைய வசனங்களோடு எதையும் கூட்டவோ குறைக்கவோ வேண்டாம் என்று எச்சரிக்கிறது வெளி 22: 18, 19 யாக்கோபு இதைப் பூரணப் பிரமாணம் என்கிறார். யாக் 1:25 தேவனுடைய அனைத்து ஆலோசனைகளில் ஒன்றையும் மறைக்காமல் அறிவித்து விட்டதாக பவுல் எபேசு பட்டணத்து மூப்பர்களிடம் கூறுகிறார். அப் 20:26. அப்படி இருக்கும்போது இன்றைக்கு எவருக்கும் புதிய வெளிப்பாடுகள் கிடைப்பதாகச் சொல்லுவது எவ்வளவு பொருத்தமற்ற, தேவ சித்தத்துக்கு முரணான காரியம் என்பதை நீங்களே எண்ணிப்பாருங்கள்.

**4. நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் இல்லையென்றால் நீங்கள் இரட்சிப்படைந்திருக்கமுடியாது.**

"கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல ரோமர் 8:9 ஆனால் நீங்கள் வேத வசனங்களின்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாமல் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற முடியாது.

அப், 2:38, “ நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின் படியே மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிய தாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.” நீதி நெறிகளைப் பின்பற்றி நாம் செய்த நற்செயல்களை முன்னிட்டன்று; தம் இரக்கத்தை முன்னிட்டு புதுப் பிறப்புத் தரும் முழுக்கினாலும் புத்துயிர் அளிக்கும் பரிசுத்த ஆவியினாலும் இறைவன் நம்மை மீட்டார் என்கிறது. திருத்திய மொழி பெயர்ப்பு தீத்து 3:5. தேவனுடைய திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் வாய்ப்பு எத்துணை மேன்மையானது. 2 பேதுரு 1:4. ஆகையால் நாம்மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருப்போம். அபே 5.39.

“ ஜான் வேடி ”

## கடைசி கால எச்சரிக்கை

இறுதி நாட்கள் பொல்லாத காலமாயிருக்கும் அப்போது மக்கள் தந்நலப்பிரியர், பொருளாசை பிடித்தவர், வீம்புக்காரர், செருக்குடையவர், பழித்துப் பேசுபவர், பெற்றோருக்கு அடங்காதவர், நன்றி கொன்றவர், இறைவனைப் புறக்கணிப்பவர், பரிவில்லாதவர், தீராப் பகையினர், புறணி பேசுபவர், தன்னடக்கமற்றவர், கொடியவர், நல்லதை வெறுப்பவர், நம்பிக்கைத் துரோகிகள், மூர்க்கர், இறுமாப்புடையவர் ஆக இருப்பர், அவர்கள் கடவுளை நாடுவதை விடச் சிற்றின்பங்களையே நாடுவர், பக்தியின் வெளித் தோற்றத்தைக் கொண்டிருப்பார்கள் ஆனால் அதன் உள்ளாற்றலைப் பொருட்படுத்த மாட்டார்கள். இவர்களில் சிலர் பிறர் வீடுகளில் புகுந்து மதிகெட்ட பெண்களை வயப் படுத்துகிறார்கள். இப் பெண்களோ பாவங்களால் மூழ்கடிக்கப் பட்டு. பல்வேறு இச்சைகளால் ஈர்க்கப்பட்டுள்ளனர், இவர்கள் ஓயாமல் கற்றுக் கொண்டேயிருந்தாலும், உண்மையைக் கண்டுணர்வதில்லை. உண்மையை எதிர்த்து நிற்கிறார்கள். இவர்கள் சீரழிந்த மதிகொண்டவர்கள். விசுவாசத்தைப் பொறுத்த மட்டில் பயனற்றவர்கள் இவர்கள் போக்கு நீண்டநாள் நீடிக்காது.

## செல்வந்தர்கள் கவனத்திற்கு

இவ்வுலகில் செல்வம் படைத்தவர் இறுமாப்பு கொள்ளலாகாது. நிலையில்லாச் செல்வத்தில் நம்பிக்கை வைக்காமல் நமது இன்பத்துக்காக எல்லாவற்றையும் ஏராளமாக அளிக்கும் கடவுள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அவர்கள் நன்மை செய்து, நற்செயல்கள் என்னும் செல்வம் சேர்ப்பார்களாக! தங்களுக்குள்ளதை பிறரோடு தாராள மனத்துடன் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

# பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு

'' என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறூர்: அவருடைய பாதரட்சைகளின் வாரைக்குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல. நான் ஜலத்திஞல் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன்; அவரோ பரிசுத்த ஆவியினுல் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் '' (மாற்கு 1:7-8) என யோவான் ஸ்நானன், அவனிடம் திருமுழுக்குப் பெற திரளாக வந்த யூதேயா தேசத்தாரையும் எருசலேம் நகரத்தாரையும் நோக்கிக் கூறிஞன். யோவான் இங்கு குறிப்பிடும் '' அவர் '' தேவனுடைய குமாரஞகிய இயேசு கிறிஸ்துவே.

இயேசு கிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்த பின்னர் அவருடைய சீடர்களிடம், '' என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன், நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலஞல் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்'' (லூக்கா 24:49) என்றும் தொடர்ந்து, '' யோவான் ஜலத்திஞலே ஞானஸ்நானம் கொடுத்தார்: நீங்கள் சில நாட்களுக்குள்ளே பரிசுத்த ஆவியிஞலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பலனடைவீர்கள் எனவும் கூறியிருந்தார். அதன் பின்னர், ''அவர் உயர எடுத்துக் கொண்டதாகவும், அவர்கள் கண்ணுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டதாகவும்'' ''(அப்போஸ் 1:8) பரிசுத்த நற்செய்தி கூறுகிறது,

கிறிஸ்து இவ்வாருக தனது அப்போஸ்தலாகளுக்கு வாக்குத்தத்தம் செய்து பத்து நாட்கள் கடந்த பின்னர், அவருடைய சீடர்கள் பிதாவின் வாக்குப்படி ஜெருசேலம் நகரிலே காத்திருந்தனர். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கம் உண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று, அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியிஞலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கிஞர்கள் என அப்போஸ்தலர் நடபடி 2:2-4 வசனங்களில் நாம் படிக்கிறேம்.

எனவே, தேவன் வாக்களித்தபடியே கிறிஸ்துவின் அப்போஸ்-தலர்கள் பரிசுத்த ஆவியிஞல் திருமுழுக்குப் பெற்ருர்கள். அவர்கள் கற்றிராத பல மொழிகளில் பேசும் வல்லமையை பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு அவர்களுக்கு அளித்திருந்தது '' உலகமெங்கும் போய் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க'' (மாற்கு 16:15) தேவன் அவர்களிடம் ஏற்கனவே கூறியிருந்தார், ஆகையால் பரிசுத்த

ஆவியின் திருமுழுக்கு வழியாக, பல மொழிகளிலும் பேசும் வல்லமையை தேவன் அவர்களுக்கு அளித்தார். மொழிபெயர்ப்பாளர்கள் அவர்களுக்குத் தேவைப்படவில்லை. அல்லது புதுப்புது மொழிகளைக் கற்க பள்ளிகளுக்குச் செல்ல நேரமும் அவர்களுக்கு கிடையாது. இருந்தாலும் உலகம் முழுவதும் நற்செய்தியை அறிவிக்கும் பணி அவர்கள் பேரில் சுமத்தப்பட்டிருந்தது. எனவே வித்தியாசமான பல மொழி பேசும் மக்களிடையே நற்செய்தியைப் போதிக்க, தேவன் அவர்களை பரிசுத்த ஆவியினால் திருமுழுக்கு பெறச் செய்தார். ''நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?'' (அப்போஸ் 2:8) எனக் கேட்ட திரளான மக்களின் கேள்விக்கு இது விடையாக அமைகிறது. 'பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பலனடைவீர்கள்' (அப் 1:8) என தேவன் அப்போஸ்தலர்களுக்கு வாக்களித்ததை இங்கு நினைவு கூறுகிறோம்.

பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றபின், பிற மொழிகளில் பேசும் திறன் பெற்றது மட்டுமல்ல - சத்திய வசனம் கூறுவது போல '' அப்போஸ்தவர்களுடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது... பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின் மேலும் கிடத்தி பேதுரு (ஒரு அப்போஸ்தலர்) நடந்து போகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர் மேல் படும்படிக்கு அவர்களை வெளியே வீதிகளில் கொண்டு வந்து வைத்தார்கள்... அவர்களெல்லோரும் குணமாக்கப்பட்டார்கள் '' (அப்போஸ். 5:12, 15-16) கவனியுங்கள்: அவர்கள் எல்லோரும் குணமாக்கப்பட்டார்கள் எனக் கூறுகிறது வேத வசனம். அதாவது, குணமாகாமல் ஒருவர் கூட விடுபட்டுப் போகவில்லை என்பதே இதன் பொருள். ஏன் ?ஏனெனில் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்தார்கள். '' கிறிஸ்தவர்களின் கைகளால் என்றோ, போதகர்களின் கைகளால் என்றோ கூறப்படவில்லை மாறாக, 'அப்போஸ்தலர்களின் கைகளாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டன.' என்றுதான் கூறுகிறது வேதம். சமீபத்திலே இங்கு (தில்லி) ஒரு குடும்பத்தைச் சந்திக்க சென்றிருந்தேன். வெளி நாட்டிலிருந்து அப்போது தில்லிக்கு வந்துள்ள ஒரு போதகரிடம்: பல வருடங்களாக மனநோயால் பீடிக்கப்பட்ட தங்கள் மகளை அழைத்துக் கொண்டு அக்குடும்பத் தலைவர் சென்றுள்ளதாகவும், அவர் கை வைத்து ஜெபித்தால் சுகம் கிட்டும் என்பதாகவும். அக்குடும்பத் தலைவி என்னிடம் கூறினார், ஆனால் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அந்தப் பெண் இன்னும் சுகவீனமாகவே இருக்கிறாள் ஏன்? அந்த போதகர் ஒரு அப்போஸ்தலர் அல்ல என்பதே காரணமாகும்.

யோவான் 14:26 வசனத்தின்படி, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்தார்கள். எனவே பரிசுத்த ஆவி-

ஆகிய தேற்றவாளனே எல்லாவற்றையும் அவர்களுக்குப் போதித்து இயேசு இவ்வுலகில் அவர்களோடு இருந்த போது சொன்ன எல்லாவற்றையும் அவர்களுக்கு நினைப்பூட்டினார். புதிய ஏற்பாடாகிய நற்செய்தியை நமக்கு எழுதித் தருவதில் எவ்விதத் தவறும் ஏற்பட்டு விடாதபடி பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை அவர்கள் பெற்றிருந்தார்கள். ''சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி, வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.'' (யோவான் 16:13) என ஏற்கெனவே இயேசு அவர்களுக்குச் சொல்லிருந்தார். ஆகவே, தான் அப்போஸ்தலன் பேதுரு, ''வேதத்திலுள்ள எந்தத் தீர்க்க தரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். (2 பேதுரு 1:20,21) என எழுதினார்.

இவை யாவும் நமக்குத் தெளிவுபடுத்துவது யாதெனில்; கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருந்தார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்கள் நேரில் இறங்கிய போது அவர்கள் கற்றிராத புது மொழிகளில் பேசும் வல்லமையைத் தந்து உலக முழுவதும் நற்செய்தியைப் போதிக்கும் பணியை செய்ய உதவினார். (கொலோ 1:23) பரிசுத்த ஆவியின் வல்லமையால் அவர்கள் செய்த அற்புதங்களும் அடையாளங்களும், அவர்கள் போதித்தது தேவனின் செய்தியே என்ற உண்மையை மக்கள் நம்பும்படிச் செய்தன.

இறுதியாக, தேவனின் நற்செய்தியை தவறு ஏதுமின்றி அப்போஸ்தலர்கள் நமக்கு எழுதித் தந்திட பரிசுத்த ஆவியானவர் அவர்களை வழி நடத்தினார்.

தமிழில்: S. S. ராஜன்

## வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்

வெளிவேடக்கார மறை நூல் அறிஞரே, பரிசேயரே உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில் நீங்கள் கிண்ணத்தையும் தட்டையும் ஆடையையும் உடம்பையும் தூய்தாக்குகிறீர்கள். ஆனால் உங்கள் உள்ளமோ தேடும் துர்இச்சையும் நிறைந்து காண்படுகின்றன. கல்லறையின் மேற்புறத்துக்கு வெள்ளையடித்து விட்டால் உள்ளே இருக்கிற நாற்றமும் பிண வாடையும் போய் விடுமோ?

# இயேசுவின் அன்பின் பரிமாணங்கள்

எபேசு பட்டணத்துச் சபையாருக்கு எழுதின நிருபத்தில் கிறிஸ்துவின் அன்பின் பரிமாணங்களைப்பற்றி பவுல் அப்போஸ்தலன் கீழ் வருமாறு எழுதுகிறார்.

'இதனிமித்தம் நான் பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகரணராகிய

நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு

நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்படவும்.

விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களின் வாசமாயிருக்கவும் நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாகி

சகல பரிசுத்தவான்களோடு கூடக் கிறிஸ்வினுடைய அன்பின் அகலமும், நீளமும்; ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து.

அறிவுக் கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்: அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அனுக்கிரகம் பண்ண வேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்.' எபே. 3:14-19.

இந்த வசனப் பகுதியில் பவுல் நமக்குச் சொல்ல வருகிற செய்தியென்னவெனில்: வீழ்ந்து போன மனுக்குலத்துக்காக கிறிஸ்து செய்த தியாகத்தின் மேன்மையை கிறிஸ்தவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளுவதற்குத் தேவையான ஞானத்தைக் கொடுத்து, கிறிஸ்துவின் அன்பின் பரிமாணங்களாகிய அகலம், நீளம், உயரம், ஆழம் ஆகியவைகளை சரியாக மதிப்பீடு செய்ய உதவ வேண்டும் என்று மன்றாடுகிறார்.

அந்த அன்பின் ஆழம் எவ்வளவு என்பதை அளவிட முடியாவிட்டாலும் அது தரும் இரட்சிப்பைப்பற்றிய நம்பிக்கையை நாம் பாராட்டலாம். அப்பொழுது நம்மீது அத்தகைய அன்பு கூர்ந்த கர்த்தரின் சேவையில் நம்முடைய எஞ்சியுள்ள வாழ்க்கையைக் கழிக்க ஆர்வம் உண்டாகும். அவர் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு தந்திருக்கிற மகிமைக்கும் உயர்வுக்கும் தக்கதாக நாம் வாழ முற்படுவோம்.

## அவருடைய தெய்வீக அன்பின் அகலம்:

உலகில்உள்ள அனைத்து மாந்தருக்காகவும், எவ்வித பாகுபாடுமின்றி மரித்ததினாலே அவருடைய அன்பின் அகலத்தைக் காணமுடியும். யூதனென்றும், கிரேக்கனென்றும் வித்தியாசமேயில்லை, எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார் ரோமர் 10:13. மனித அன்பின் எல்லை குறுகியது. குடும்ப உறவினர், நண்பர்கள் தான் சார்ந்துள்ள சமுதாயம் என்ற அளவில் தான் இருக்கும். ஆனால் கிறிஸ்துவின் அன்பு, மொழி, இனம், நிறம், ஜாதி, மதம், ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமில்லாமல் எல்லா மக்களிடத்திலும் விளங்கும். 'நாம் இன்னும் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார். (ரோமர் 5:9) என்பதின் பொருள், கிறிஸ்துவின் அன்பு சகல எல்லைக் கோட்டையும் கடந்து வியாபித்திருக்கிறது என்பதாகும், கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது: ஏனென்றால் எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்று கூறும்போது 2 கொரி 5:14. அவருடைய அன்பு ஒரு சாரார்க்கு அல்லது தனக்கு வேண்டியப்பட்டவர்களுக்கு மட்டும் என்று நின்று விடாமல் எல்லாத் தரப்பினரையும் இது அணைத்துக் கொள்கிறது என்று பொருள்படுகிறது. அதனால் தான் பவுல் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன்: இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார், நான் இப்பொழுது மாமிசத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்'' என்கிறார் கலா 2:20. இந்த அன்பின் அகலம் ''தேவன் பட்சபாதகமுள்ளவரல்ல (அப் 10 : 34) என்றும் கிறிஸ்து இயேசுவுக்குள் யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை அடிமையென்றும், சுயாதீனனென்றும் இல்லை. ஆணென்றும், பெண்ணென்றும் இல்லை. நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் (கலா 3:28) என்று கூறி தன், அகில உலகத்தன்மையை வெளிப்படுத்துகிறது. தேவன் சமுதாயத்தின் உயர் மட்டத்தில் இருக்கிறவர்களையும் செல்வாக்குப் படைத்தவர்களை மட்டுமே நேசிக்கிறார் என்று ஒரு நிலை இருக்குமானால் அது எவ்வளவு துக்ககரமாக இருக்கும்.

## தேவ அன்பின் நீளம்

தேவனுடைய தெய்வீக அன்பின் நீளத்தை சரியாக அளப்பதற்கு முற்பட்ட யோவான் தேவன் அன்பாயிருக்கிறார் என்ற ஒரு வரி விமர்சனம் செய்கிறார். யோவான் 4;8 தேவன் நித்துயமுள்ளவராய் (ஆதியும் அந்தமுமில்லாத) இருப்பது போல் கிறிஸ்துவின் அன்பும் இருக்கிறது.........தாம் இவ்வுலகத்தில் இருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவு பரியந்தமும் அன்புவைத்தார்?

என்பது எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது! யோவான் 13:1. அவருடைய அன்பு நிலையானது; உறுதியானது. நம் தேவனுடைய தெய்வீக அன்பின் எல்லையைத் தாண்டிப் போய்விடவே வழியில்லை. அது எப்போதும் நமக்குப் பாதுகாப்புத் தரும். அது ஒருக்காலும் தவறுவதே யில்லை. அந்த தெய்வீக அன்பின் பிணைப்பைப் பற்றி பவுல் வர்ணிக்கும் போது "மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், வல்லமைகளானாலும் நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும் வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்க மாட்டாது என்று நிச்சயித்திருக்கிறேன்'' என்கிறார் ரோமர். 8:38,39. தேவன் நம்மை நேசித்து, நாம் இன்னும் பாவிகளாக இருக்கையில் தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளினார். அவர் மூலமாக தேவ அன்பு நமக்குள் ஊற்றப்பட்டிருக்கிறபடியால்'' (ரோமர். 5:5) ''நாம் முடிவு பரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டும் என்று'' ஆவலாயிருக்கவேண்டும். (எபி. 6:12.)

## தேவ அன்பின் ஆழம்

பாவத்தையும், அதனால் விளையும் எல்லாவிதக் கேட்டையும், நாசத்தையும், தேவ அன்பால் தடுக்க முடியவில்லையே என்ற அங்கலாய்ப்புக்கே இடம் இல்லை. பாவத்திலிருந்தும், அக்கிரமங்களிலிருந்தும் மனுக்குலத்தைக் காப்பாற்றுவதற்காக பரலோகத்தின் சேனைத்திரள் எப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளுகின்றன என்ற விஷயத்தை மனித ஞானத்தால் அளவிட முடியாது. மனுக்குலம் பாவத்தின் பிடியிலும், மாமிச இச்சை என்ற சேற்றிலும் விழுந்து மாண்டு கொண்டிருக்கும் வேளையில் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்காக மரிக்க ஒப்புக்கொடுத்தார். இந்த அற்புதமான கருத்தை விளக்கும் வசனம் தான் யோவான் 3;16. 'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.' அதனால் தான் இந்த வசனத்தை 'சின்ன வேதாகமம்' என்கின்றனர். நாம் பாவ பாதாளத்தின் எந்தக் கிடு கிடு ஆழத்தில் எந்த மூலையில் மறைக்கப் பட்டிருந்தாலும் அங்கேயும் அவருடைய நேசக்கரம் நீளத்தக்க அளவில் அவருடைய அன்பின் ஆழம் இருக்கிறதைப் பாருங்கள்.' உங்கள் பாவம் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மை ஆகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்' என்கிறார் ஏசாயா தீர்க்கன். ஏசாயா. 1;18. 'ஒருவன் தன் சிநேகிதனுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவனிடத்திலுமில்லை' யோவான். 15:13. ஒருவன் தன் நண்பனுக்காக மரிக்க முன்வருவானானால் அது அவனுடைய நட்பின் ஆழத்தைக் காட்டும்' ஆனால் நாமோ தேவனுக்கு நண்பர்களாயிருக்க

தகுதியற்ற சத்துருக்களாக இருந்தோம். ஆனாலும் தன் ஒரே பேறான குமாரனை நமக்காக மரிக்க ஒப்புக்கொடுத்தார். இத்துடன் பிலி. 2:5-8 வசனப்பகுதியையும் சேர்த்து வாசித்து கிறிஸ்துவின் அன்பின் ஆழத்தைக் கவனியுங்கள், நம் நிமித்தம் அவர் எவ்வளவாய் தம்மைத் தாழ்த்தி கீழ் இறங்கி வந்து தமது தெய்வீக அன்பை தெளிப்படுத்தியிருக்கிறார் என்று நினைக்கும்போது உருகாத மனம் இருக்குமா?

## அவருடைய தெய்வீக அன்பின் உயரம்

ஒருவர் நமக்கு என்ன செய்தார் அல்லது என்ன செய்யவிருக்கிறார் என்பதை வைத்தே ஒருவருடைய அன்பை மதிப்பீடு செய்து அவருக்கு பதில் செய்வது மனித இயல்பு. ஆனால் தேவனும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவும், நம்மீது பாராட்டுகிற அன்பு அத்தகையதன்று. 'நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப் படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்' 1 யோவான் 3:1, நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிற அளவுக்கு உயர்த்தப்படுவதற்கு நாம் செய்தது ஒன்றுமே இல்லை. ஒருவன் மேல் அன்பு கூறுவது யார், அவர் எப்படிப்பட்டவர், அவருடைய அந்தஸ்து என்ன? என்று தெரிந்த பின்னர் தான் அவர் பாராட்டுகிற அன்பின் தன்மையை ஒருவன் உணரமுடியும். அதைவிட உயர்ந்தவர்களாகிய தேவனாலும், அவருடைய குமாரனாலும் நேசிக்கப்படுவதற்கும் நாம் அவர்களை நேசிப்பதற்கும் கிடைத்திருக்கும் வாய்ப்பை எப்படி வர்ணிக்க முடியும்? அத் தெய்வீக அன்பின் காரணமாக நம்முடைய அற்ப சுயநலமுள்ள அன்பின் தரம் கூட உயர்ந்து விடுகிறது. 'பிரியமானவர்களே! ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்' (1 யோவான் 4:7.) 'நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார் அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்' 1 யோவான் 4:12. 'அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்' 1 யோவான் 4:19. இந்த தெய்வீக அன்பில் யார் எல்லாம் பங்கு பெறுகிறார்களோ அவர்களையும் இது உயர்த்துகிறது. எல்லாப் பரிசுத்தவான்களுக்கும் இது பொருந்தும்' பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்' எபே 5:1-2, இப்படிப்பட்ட தெய்வீக அன்பின் இதமான வெப்பத்தால் புளகாங்கிதம் அடைகிற நாமும் உயர்ந்த சிந்தனையிலும் நடக்கையிலும் வளர்ந்து பெருகுவோமாக!

சுருக்கமாகக் கூறின், அவருடைய தெய்வீகஅன்பின் அகலம் உலகத்திலுள்ள அனைத்து மாந்தர்களையும் மன்னித்து மீட்கக்

கொள்ளத்தக்க விதத்தில் படர்ந்து கிடக்கிறது. அதின் நீளம் முடிவில்லாத நித்தியத்தின் அகன்ற கரைகள் வரை நீண்டு மனுகுலத்தின் தேவை அனைத்தையும் சந்திக்கிறது. அதின் உயரம் எதையும் விட்டு விடாமலும் தவறவிடாமலும் அணைத்துக்கொண்டு பரலோகம் வரை எட்டி நமது தேவனுடைய அரியாசனம் இருக்கும் அறைக்குள் புகுந்து அங்கு பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து தம்முடையவர்களுக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கும் கிறிஸ்துவின் பாதபடிவரை செல்லுகிறது. அதன் ஆழம் வீழ்ந்துபோன மனிதனை உளையான சேற்றிலிருந்தும், மீளவே முடியாது என்ற நம்பிக்கை அற்றுப்போன நிலையிலிருந்தும் தூக்கி எடுத்து பரலோகப் பிதா, மேலோகத்தில் பரிசுத்தவான்களுக்காகக் கட்டப்பட்டுள்ள மாளிகையில் வைக்கிறது' என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு .........ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை சேர்த்துக் கொள்வேன்' என்று அவர் நமக்கு வாக்குக் கொடுத்திருக்கிறாரே. யோவான் 14:2,3.

தில்லார்டு தர்மன்

## கிறிஸ்தவப் பெண்களின் அலங்காரம்

பெண்டிர் அடக்க ஒடுக்கமாகவும், நாணத்தோடும் ஏற்புடைய ஆடைகளை உடுத்திக் கொள்ள வேண்டும். பின்னல் சடையும், பொன்னும், முத்தும், ஆடம்பரமான உடைகளும் அவர்களுடைய அணிகலன்கள் அல்ல; கடவுள் பற்றுகொண்டு நற்செயல் புரிதலே அவர்களுக்கு அணிகலன். பெண்கள் தாழ்மையோடு அறிவுரை ஏற்கவேண்டும் பெண்கள் ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தல் கூடாது. சபைகளில் பெண்கள் பேசுவது அழகன்று.

## ஊழியர்கள் கவனத்திற்கு

முதியோரிடம் கடுமையாய் இராமல் தந்தையாகக் கருதி அறிவு புகட்டவேண்டும், இளைஞரைத் தம்பியாகவும், வயது முதிர்ந்த மாதரைத் தாய்மாராகவும், இளம் பெண்களைத் தூய உள்ளத்தோடு தங்கையராகவும் கருதி நடத்த வேண்டும் அறுபது வயதுக்குக் குறையாத கைம்பெண்கள் ஆதரவற்ற நிலையில் இருந்தால் அவர்கள் சபையாலே பராமரிப்புப் பெறலாம்.

# கேளுங்கள் - தேடுங்கள் - தட்டுங்கள்

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்: தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.
(லூ. 11.9)

இறைவன் மனிதனை ஒரு பொம்மையைப்போன்று படைக்கவில்லை, அவனை சுதந்திர மனிதனைப் படைத்தார். மனிதனுக்குக் கடவுள் கொடுத்த உரிமைகளை எந்த நெருக்கடி நிலையிலும் அவர் பறித்து, விடுவதில்லை. எனவே தம்மை நோக்கிக் கூப்பிடவும். தம்மைத் தேடவும் அவர் ஏவுகிறார். கடவுளின் கடின கரங்களை அசைக்கும்படி நாம் வேண்டிக் கொள்ளவில்லை. ஏற்கெனவே அவர் கருணையுள்ளவராக இருக்கிறபடியால் நாம் வேண்டிக்கொள்ளுகிறோம்.

கடவுள் நம்பிக்கை என்பது ஒரு குழந்தைப் பற்று ஆகும் கேட்பதும், தேடுவதும், தட்டுவதும் நாம் கடவுளுடன் கொள்ளும் ஈடுபாட்டைக் குறிக்கின்றன. இந்த ஈடுபாட்டினால் நமது வாழ்க்கை மாற்றமடைகிறது. ஜெபம் கடவுளின் சித்தத்தை மாற்றுவதில்லை கடவுளின் சித்தத்துக்கு ஏற்ப மனிதனை மாற்றுகிறது: என்று சாது சுந்தர்சிங் கூறுகிறார், யாப்போக்கு ஆற்றங்கரையில் கடவுளுக்கும் யாக்கோபுக்கும் நடந்த போராட்டத்தின் பெரிய விளைவு, யாக்கோபின் வாழ்க்கை மாற்றப்பட்டதாகும். ஆம். இதுதான் வெற்றி இவ்வித குழந்தைப் போராட்டம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தேவை. அப்போதுதான் கடவுளை மகிழ்ச்சி நிறைந்தவராகவும், நீதியின் சூரியனாகவும் காணமுடியும்,

**கேளுங்கள் :** விருப்பத்தோடு கேளுங்கள். ஆண்டவரின் சித்தம் எது என்று கேளுங்கள். நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறார் என்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம் (1 யோ. 5:14). ஜெபத்தில் நமது வார்த்தைகளல்ல, வாஞ்சைதான் முக்கியம், மானனது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல நமது உள்ளம் ஆண்டவரை வாஞ்சித்துக் கதறவேண்டும். (சங். 42:1). கடமைக்காக ஜெபிக்கிறவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் பழக்கப்பட்டுப்போன சில வார்த்தைகளை அலப்புவது ஆகாயத்தில் சிலம்பம் அடிப்பதாகும். நமது மனம் ஒன்று படவில்லையென்றால், புத்தகங்களிலிருந்து ஜெபங்களை வாசிப்பது பொருளற்ற செயலாகும். நமது வாஞ்சையைப் பொறுத்தும் விருப் பத்தைப் பொறுத்தும் அவர் நமக்கு அருளுகிறார். மேலும், நாம்

பெற்றுக்கொள்ளும்வரை கேட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். ஒரு சிறு பெண் தனது வீட்டருகே கடும் வெயில் நேரத்தில் விளையாடிக்கொண்டு இருந்தாள். அப்போது அவளுக்குத் தாகம் வந்தது. வீட்டு வாசலில் ஓடோடி வந்து 'அம்மா தண்ணீர்' என்று கேட்டாள். அம்மா தண்ணீர் என்று கேட்டாள், அம்மா தண்ணீர் கொண்டு வந்தாள். ஆனால். அந்த சிறு பெண்ணைக் காணவில்லை. அவள் விளையாடப் போய் விட்டாள். உடனே, அந்த அம்மா தண்ணீரை எடுத்துக்கொண்டு வீட்டிற்குள் போய்விட்டார்கள். இப்படியே மூன்று தட்வை நடந்தது. கடைசியில் அந்த சிறு பெண் தாகத்தைப் பொறுக்க முடியாதவளாக 'அம்மா தண்ணீர்' என்று சோர்ந்த குரலில் கேட்டுவிட்டு வாசல்படியில் விழுந்து கிடந்தாள். அம்மா ஓடோடி வந்து அவளைத் தூக்கி மடியிலே போட்டு அவளுக்குத் தண்ணீர் கொடுத்து அவளைத் தேற்றினார்கள். சிலருடைய ஜெபங்களும் இப்படித்தான் இருக்கின்றன. ஏதோ ஒரு கட்டத்தில் கடவுளிடம் எதையோ கேட்கிறார்கள். ஆனால் அவரிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெறுமுன்மறுபடியும் பழைய வாழ்க்கைக்கு ஓடிவிடுகிறார்கள், இறுதியில் இறைவனின் பாதத்தில் முழு மனதோடு சரணகதி அடைகிறவர்கள். அவரிடமிருந்து மேலான நன்மைகளையும் அழிவில்லாத நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

**தேடுங்கள் :** நிச்சயத்தோடு தேடுங்கள். விடாமுயற்சியோடு தேடுங்கள். 'பெத்தேலைத் தேடாதேயுங்கள். கில்காலைச் சேராதே யுங்கள்...கர்த்தரைத் தேடுங்கள். அப்பொழுது பிழைப்பீர்கள்' (ஆமோஸ் 5:5,6), 'ஆண்டவரைத் தேடுதல் என்பது ஆண்டவரைச் சேருதல் என்று பொருள்படும். காணாமல் போன வெள்ளிக்காசைத் தேடுவதற்காக விளக்கைக் கொளுத்தி வீட்டைப் பெருக்கின. பெண்ணின் முயற்சி நமக்கும் வேண்டும். இயேசுவைப் பார்க்க வேண்டி தேடிக் கொண்டிருந்த சகேயு அவரைக் காணுமுன் அவர் அவனைக்கண்டு விட்டார். இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுமைந்தன் வந்திருக்கிறார். (லூ. 19:10). அவர் நம்மைத் தேடி வருகிறார் என்பதை உணராமல் வேறு எங்கேயோ ஓடுகிறவர்கள் அவரைக் கண்டு பிடிக்க முடியாது. மனிதனைத் தேடும் ஆண்டவரும், ஆண்டவரைத் தேடும் மனிதனும் ஒருவரையொருவர் சந்திக்கும்போது எத்தனை மகிழ்ச்சி! ஆம், இந்த மகிழ்ச்சியின் அனுபவம் ஜெபநேரத்தில் நமக்கு ஏற்படுகிறது. கலிலேயாவில் நமக்குமுன் நடந்து கொண்டிருக்கும் இயேசுவைக் கல்லறையண்டையில் தேடுவதில் பயனில்லை. அலங்காரம் நிறைந்த ஆலயத்தில் கடவுளைத் தேடி நின்ற யூதர்கள் அங்கு அவரைக் காணவில்லை. மாறாக பாவிகளின் நடுவில் கடவுளின் செயலை உணர்ந்த இயேசு கிறிஸ்து — அங்கே அவரை முழுமையாகக் கண்டுகொண்டார் கள். தேவ வசனப் பாலின் மீது ஒரு தேட்டம் வேண்டும். வேதவசனங் களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்போது நமது அந்தரங்கத்தைக் காணும் தேவன் வெளியரங்கமாய்ப் பலனளிப்பதைக் காண்போம்.

**தட்டுங்கள் :** நம்பிக்கையோடு தட்டுங்கள். தட்டிக்கொண்டேயிருங்கள். நீடிய பொறுமையுடன் தட்டுங்கள், ஆண்டவருடைய தட்டுதலுக்குத் தங்கள் உள்ளங்களைத் திறந்து பழக்கமுள்ளவர்கள்தான் இடைவிடாது தாங்களும் தட்டிக்கொண்டிருக்க முடியும், எவருடைய வீட்டையும் எவரும் எளிதாகச் சென்று தட்டிவிட முடியாது. தட்டுதலில் உரிமை உண்டு, நாம் ஜெபத்தில் ஆண்டவரின் கதவைத் தட்டும் போது அவர் நமது உள்ளத்தை நமக்குத் திறந்து காட்டுகிறார். அவரிலிருக்கும் சிந்தை நம்மில் பாய்ந்து வரும். அவருடைய பார்வை நமக்கும் ஏற்படும். பல்முறை தட்டியும் சிலவேளை திறக்கப் படுவதில்லை. இதில் குற்றவாளி அவர் அல்ல, நாம்தான், இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை, கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. நம்முடைய அக்கிரமங்களே அவருக்கும் நமக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகின்றன. (ஏசா. 59.1.2). வானத்திலிருந்து தேவ ஆசீர்வாதத்தை வரவழைப்பது மக்களின் தாழ்மையும் தூய்மையான வாழ்வுமாகும். ஆண்டவர் கதவைச் சீக்கிரம் திறப்பதற்கு ஒரே வழி, உருகிய உள்ளங்களிலிருந்து எழும் பாவ அறிக்கையாகும். பெருமை பாராட்டிய பரிசேயனுடைய விண்ணப்பம் நீதிபரர் உள்ளத்தைத் தட்டவில்லை, ஏழை ஆயக்காரனின் 'தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும். என்னும் வார்த்தைகள் ஆண்டவரின் சுரங்களை இயங்கவைத்தன, அவன் அந்நேரமே நீதிமானாக்கப்பட்டான் நாம் எந்த இடத்தில், எந்த வேலையிலிருந்தாலும் நமது சிந்தை விண்ணப்ப ஆவியால் ஆட்கொள்ளப்பட்டிருக்குமானால் பரலோகம் நமக்குத் திறக்கப்பட்ட பொக்கிஷமாகவேயிருக்குமாம்.

கேட்பதும் தேடுவதும் தட்டுவதும் ஒரே நேரத்தில் நடந்து கொண்டேயிருக்க வேண்டும். 'கர்த்தர் பரலோகத்திலிருந்து நோக்கிப் பார்க்குமட்டும், என் கண் இடைவிடாமல் ஓய்வின்றிச் சொரிகிறது. என்று பக்தன் பாடுகிறார் (புல 3;49. 50). சில வேளைகளில் நமது பொறுமை சோதிக்கப்படலாம். நாம் நினைப்பதற்கு மேலான ஒன்றை நமக்குச் செய்யும்படி ஆண்டவர் சமயம் பார்த்துக்கொண்டிருக்கலாம் அப்போதும் நமது குரல்கள் ஓயவேண்டாம். நம் பெருமூச்சுக்கும் நம் கூப்பிடுதலுக்கும் தேவன் தமது செவியை அடைத்துக்கொள்ளாமல் நமக்கு உதவி செய்கிறார். (புல. 3;56. 57). அன்னாளின் கண்ணீரும் ஆகாரின் அழுகையும். யோனாவின் வேண்டுதலும் எரேமியாவின், பெருமூச்சும் ஆண்டவர் சமுகத்தில் வல்லமை மிகுந்த கரங்களாக தட்டிக்கொண்டிருக்கின்றன. உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே என்று
தாவீதோடு சேர்ந்து நமது இருதயமும் சொல்லட்டும்
(சங். 27:9).

எபிநேசர்

## நீங்கள் சரியான காரணத்திற்காக ஞானமுழுக்குப் பெற்றீர்களா ?

இயேசு மண்ணிலே அடக்கம் பண்ணப்பட்டார் ஞான முழுக்கு என்பது அவருடைய அடக்கத்திற்கு ஒப்பாகத் தண்ணீரில் அடக்கம் பண்ணப் படுவதாகும். புழைய பாவ மனிதன், இயேசு அடக்கம் பண்ணப்பட்டது போல, மரித்து அடக்கம் பண்ணப்படுகிறான். கல்லறையிலே இயேசு மேல் மண் தெளிக்கப்படவில்லை என்று நாம் அறிவோம், ஆனால் கல்லறையிலே அடக்கம் பண்ணப்பட்டார். என்று அறிவோம். தண்ணீரால் ஆன கல்லறையிலே முழுகுதலின் மூலமாக அடக்கம் பண்ணப்படுதலே உண்மை ஞான முழுக்கு ஆகும். வேதாகமம் போதிக்கிறப்படி தண்ணீரில் மூழ்கி ஞான முழுக்குப் பெற்றிரா விட்டால். மறுபடியும் உண்மையான ஞான முழுக்கைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ரோமர் 6:3-7 (5-ஆம் வசனம்) ஞானமுழுக்கிலே நீங்கள் கிறிஸ்துவின் மரண சாயலில் இணைக்கப்பட வேண்டுமா? ........

ரோமர் 6:4 ஞானமுழுக்கிலே, நீங்கள் கிறிஸ்துவின் சாயலிலே கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்பட வேண்டுமா ?........

ரோமர் 6:4 (ஞான முழுக்கிலே) நீங்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சாயலில் எழுப்பப்பட வேண்டுமா :? .......

ரோமர் 6:4 (இந்த வசனத்தைக் கவனமாக வாசிக்கவும்) நீங்கள் ஞானமுழுக்கிலே, இயேசு கிறிஸ்துவோடு தெளிக்கப்பட வேண்டும் என்று வேதாகமம் சொல்கின்றதா?

ரோமர் 6:4 ஞானமுழுக்கிலே, நீங்கள் கிறிஸ்துவோடு கூட ஊற்றப் பட வேண்டும் என்று வேதாகமம் சொல்கிறதா? .....

கொலோ 2, 12, 13 (12-ஆம் வசனம்) ஞானமுழுக்கிலே நீங்கள் கிறிஸ்துவோடு கூட அடக்கம் அதாவது மூழ்குதல் செய்யப்பட வேண்டுமா?

நீங்கள் உண்மையாகவே, '' ஆம் தேவனே, நான் வேதாகமம் சொல்லுகிறபடியே சரியாக கிறிஸ்துவோடு கூட ஞானமுழுக்கிலே முழுக்கப்பட்டேன் '' என்று சொல்ல முடியுமா ? ..

தேவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினார். ஞானமுழுக்கிலே, நிங்களும் கிறிஸ்துவின் சாயலிலே தண்ணீராலான கல்லறையிலிருந்து எழுப்பப்படுகின்றீர்கள். பின்பு கிறிஸ்துவுக்குள்ளாக புதிய வாழ்க்கை துவக்கியிருக்கும், மறுபிறப்படைந்த கிறிஸ்தவர்களாயிருப்பீர்கள். பின்பு நீங்கள் கிறிஸ்துவின் உண்மையான புதிய ஏற்பாட்டுச் சபையின் உறுப்பினராயிருப்பீர்கள். ஞானமுழுக்கிலே தேவன், ஆவியானவர் ஆகியோர் உங்களுக்குள் வாழும்படி வந்து உங்களை வலுப்படுத்தி கிறிஸ்துவுக்குள்ளாக புதிய வாழ்க்கை வாழ்ந்திட

உங்களுக்கு உதவி செய்வார். தேவன் கிறிஸ்துவை உயிரோடு எழுப்பினார் என்பது உண்மையானது. நீங்களும் உண்மையான கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கையை வாழ்வீர்களானால், உங்களையும் அவ்வாறே எழுப்புவார் என்னும் உறுதி எவ்வளவு மேன்மையானது !

உங்களை இரட்சிக்கக் கூடிய தேவனுடைய வல்லமையானது, கிறிஸ்துவின் இறப்பு, அடக்கம், உயிர்த்தெழுதலினுல் வல்லமையாக மெய்ப்பிக்கப்பட்டது. கிறிஸ்துவின் இறப்பு, அடக்கம், உயிர்த்தெழுதலின் சாயலிலே, ஞான முழுக்குப் பெறும், விசுவாசத்தினாலே இரட்சிக்கப் படுவீர்கள்.

சிலுவை மீதிருந்த கள்ளன் ஞானமுழுக்கு இல்லாமலேயே இரட்சிக்கப்பட்டான், ஆகையால் சில அரைகுறை விசுவாசிகள் ஞானமுழுக்கு இல்லாமலேயே இரட்சிக்கப்படலாம் என்று இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டால் போதும் என்று பொய்யாகப் போதிக்கின்றனர். வேதாகமம் அவ்வாறு போதிக்கவில்லை. ஏன்?

1. ஏனென்றால், இயேசு கிறிஸ்து ஞானமுழுக்குக் கொடுக்கும்படி கட்டளையிடுவதற்குச் சில கிழமைகளுக்கு முன்பே (திருடன்) கள்ளன் இரட்சிக்கப்பட்டான். ஆகையால், கள்ளன் தனக்குக் கொடுக்காத கட்டளைக்குக் கீழ்படிவதென்பது முடியாத காரியம்.

2. கள்ளன் இரட்சிக்கப்பட்டபோது, இயேசு சிலுவையின் மீது இன்னும் மரிக்கவில்லை. ஆகையால் கிறிஸ்துவின் இரத்தத்தில் சேரும்படி அவருடைய இறப்பின் சாயலில் ஞானமுழுக்கு பெறமுடியாது.

3. நீங்களும், கிறிஸ்துவின் கட்டளைக்குப் பின் வாழும் யாவரும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, இரட்சிக்கப்படும்படி, ஞானமுழுக்கு பெறாமலேயே, கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஜெபம்பண்ணி பாவமன்னிப்படைய விரும்பினால் நீங்கள் தேவனுடைய வார்த்தையை புறக்கணித்த பாவத்திற்கு ஆளாவீர்கள்.

லூக்கா 23:33-43: மாற்கு 16:8-16 (கள்ளன் இயேசுமரிப்பதற்குச் சற்று முன்பாக இரட்சிக்கப்பட்டான் என்பதைக் கவனிக்க) இயேசு மரித்தோரிலிருந்து எழுந்து வானத்திற்கு ஏறிச் செல்வதற்கு சற்று முன்பாகத்தான் ஞானமுழுக்கைக் கட்டளையிட்டார். இப்படியாகக் கள்ளன் இயேசுவின் ஞானமுழுக்கு கட்டளையிடப் படுமுன்பே இரட்சிக்கப் பட்டான். நீங்கள் கிறிஸ்துவின் ஞான முழுக்கு கட்டளைக்குக் கீழ்படியாமல், சிலுவை மீதிருந்த கள்ளன் போல் ஞானமுழுக்கு இல்லாமல் இரட்சிக்கப்பட்டவர்களா ?

............

தேவனைப்பற்றிய உண்மைகளைக் குறித்துப் பேச இயேசுவிற்கு எல்லா அதிகாரமும் உண்டு, குழந்தைகளுக்கும், சிறுபிள்ளைகளுக்கும். பாவம் இல்லையென்று இயேசுவிற்கு எல்லா அதிகாரமும் உண்டு. குழந்தைகளுக்கும். சிறுபிள்ளைகளுக்கும், பாவம் இல்லையென்று இயேசு மிகத் தெளிவாக போதிக்கிறார் (மத் 18:1-10: மத் 19:14). பாவத்தைச் சுதந்தரித்துக் கொள்வது என்பது வேதாகமத்தில் போதிக்கப்படவில்லை. அது வேதாகமம் எழுதப்பட்டு பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு சேர்க்கப்பட்ட. பொய்யான மனித - கட்டளையாகும் ஞானமுழுக்கு இருதயத்திலிருந்து கீழ்படிய வேண்டும். ஆகையால் ஒருவர் வேதத்தின் போதனைகளைப் புரிந்து கொண்டு, தன் தீர்மானத்தின் படியே கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படியத் தக்க வயது உள்ளவராக இருக்க வேண்டும். (ரோமர் 6:17) நீங்கள் குழந்தையாய் இருந்தபோதோ, சிறுபிள்ளையாய் இருந்தபோதோ ஞானமுழுக்குப் பெற்றிருந்தால், அதுசரியன்று. நீங்கள் மறுபடியும் ஞானமுழுக்குப் பெற வேண்டும்.

மாற் 9:14 சிறுகுழந்தைகளை பாவிகள் என்று கிறிஸ்து சொன்னாரா ? ... . ..

அப் 8:12: அம் 16;13 இந்த வசனங்களோ அல்லது புதிய ஏற்பாடு மற்ற வசனங்களோ, குழந்தைகளுக்கும், சிறுபிள்ளைகளுக்கும் ஞானமுழுக்கு அளிக்கப்பட்டதாக போதிக்கின்றனவா? ......... ...

பரிசுத்த நீர். எண்ணெய், சிலுவை அடையாளம். பேய் துரத்துதல், ஞானமுழுக்கு உத்திரவாதி போன்ற பதங்களைப் பயன்படுத்தும் வழக்கம் வேதாகமத்தில் போதிக்கப்படவில்லை. இவைகள் மனிதனால் சேர்க்கப்பட்டவைகள். இப்பேர்ப்பட்ட பொய்யான முறைகள் உங்கள் ஞானமுழுக்கோடு சேர்க்கப்பட்டிருக்குமானால் தேவன் உங்கள் ஞானமுழுக்கை ஒப்புக்கொள்ளமாட்டார். நீங்கள் மறுபடியும், உண்மையான வேதாகம ஞானமுழுக்கிற்குக் கீழ்ப்படிய வேண்டும். அப் 19:1-5

அன்பார்ந்த நண்பரே நீங்கள் எங்களுக்கு மிகவும் சிறப்பான ஒருவர். தேவன் உங்களை நேசிக்கிறார், கிறிஸ்து உங்களை நேசிக்கிறார்: நாங்கள் உங்களை நேசிக்கிறோம். ஆதலால் இப்பொழுது தொடங்கி பரலோகத்திலும் நீடித்திருக்கும் நிலையான இன்பத்தை நீங்கள் பெற்றுக்கொள்ளும்படி நாங்கள் விரும்புகிறோம் ஆகையால் நீங்கள் விசுவாசித்து மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கை பண்ணி ஞானமுழுக்கு பெற்றால் இரட்சிக்கப்படுவீர்கள் என்று அறிவீர்கள். நீங்கள் ஒருவரும் தடுக்க முடியாத பெரிய மகிழ்ச்சியையும் அமைதியையும் அடைவீர்கள், இன்று நீங்கள் தேவனுடைய இலவச ஈவான இரட்சிப்புக்காக நன்றி செலுத்தினீர்களா? நீங்கள் அவரை நேசித்து, நம்பி, அவருக்குக் கீழ்ப்படிந்து உண்மைக் கிறிஸ்துவனாக மாறுவதாக உங்கள் இருதயத்திலே தீர்மானித்தீர்களா? உங்கள் தீர்மானம் என்ன ?

...........

பீட்டர் சாலமோன்

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. சங். 119:105

---

ஒரு நபருக்கு வியாதி கண்டது; சுகமடைய வேண்டும் என்று தேவனை நோக்கி ஜெபித்தான். ஆனால் சுகம் கிடைக்கவில்லை முடிவில் ஒரு சிலர் ஆலோசனைப்படி ஒரு சாமியாரிடம் போனான் அவன் உனக்கு தோஷம் இருக்கிறது, சாமிக்கு பூஜை போடவேண்டும் என்றெல்லாம் கூறி காணிக்கை, தோஷம் நீங்குவதற்குச் சில பொருட்கள் ஆகியவைகளைக் கொண்டு வரச் சொன்னான். அவன் சொன்னபடியெல்லாம் செய்தான். சுகமாகி விட்டது. அவன் இப்பொழுது யாரைத் தொழ வேண்டும்?

ஒரு பெண் பல ஆண்டுகளாக ஓர் வியாதியினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டு இருந்தாள். பல பட்டங்கள் பெற்ற பிரபலமான டாக்டர்கள் பலரைப் பார்த்தாயிற்று; ஒன்றும் பலனில்லை. இறுதியாக ஒரு மந்திரவாதியிடம் போய்ப் பார்த்தால் சுகம் கிடைக்கும் என்று சிலர் சொன்னதைக் கேட்டு மந்திரவாதியை அணுகினாள். அந்த மந்தரவாதி பலவிதமான பத்தியங்கள் விரதம், கழிப்பு என்று ஏதை ஏதையோ கூறி பூஜைச் செலவுகளுக்கு ஒரு கணிசமான தொகையைப் பெற்றுக் கொண்டான். அவளுக்கும் சுகம் ஆகிவிடுகிறது, அப்படியானால் அந்தப் பெண்மணி, மந்திரவாதி சொல்லுகிற அனைத்துக் காரியங்களுக்கும் கட்டுப்பட்டு கீழ்ப்படிய வேண்டுமா? இதையெல்லாம் பார்க்கிற, கேள்விப்படுகிற விசுவாசிகளுக்கு ஒரே குழப்பம்! அநேக ஆச்சரியமான காரியங்கள் நடைபெறுகிற சம்பவங்களும் நிகழ்ச்சிகளும் நடைபெறுகிற யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அநேக காரியங்கள் எப்படி நடக்கின்றன என்று நாம் விளக்கிக் கூற முடியாது. கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்க அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெற்று, விக்கிரங்களையும், பூசாரிகளையும், மந்திரவாதிகளையும், பேயோட்டிகளையும் நம்ப வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. தெருவில் வேடிக்கை காட்டி தாயத்து விற்கும் மோடிமஸ்தான்களிலிருந்து, வசதி படைத்த மதக்குருக்கள் ஈராக பலதரப் பட்ட விநோதமான கூட்டத்தாரை நாம் சந்திக்கிறோம்; கேள்விப்படுகிறோம். அப்பொழுது நாம் என்ன செய்யப் போகிறோம்? இதைக்குறித்து தேவ ஆலோசனை என்ன என்று கண்டறிய நாடுகிறோமா? அல்லது கட்டுக் கதைகளுக்குச் செவி மடுத்து நம்முடைய விசுவாசத்தில் சோரம் போகிறோமா?

முதலாவது, விக்கிரக ஆராதனை, பில்லி, சூனியம் போன்றவைகள் மாமிசத்தின் கிரியைகள் என்றும் (கலா 5:20) நாம் அவற்றிற்கு விலகியிருக்க வேண்டும் என்றும் வேதவசனங்கள் நமக்குப் போதிக்கின்றன. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பில்லி சூனியக்காரிகள் விக்கிரக

ஆராதனைக்காரர்கள் ஆகியோரைக் கொலை செய்ய வேண்டும் என்று சட்டமே இருந்தது யாத் 22:18-20. அப்படியானால் தேவனுடைய பெயராலும், அல்லது அசுத்த ஆவியின் பெயராலும் செய்யப்பட்டு வருகிற அற்புத அடையாளங்களைப்பற்றி என்ன நினைப்பது? ஒருசிலர் ''என்ன ஐயா! மனித சக்தியில் முடியாத ஒரு அற்புதம் நடந்திருக்கிறது. கடவுளுடைய ஒத்தாசையில்லாமல் இது எப்படி சாத்தியமாகும்? கடவுளுடைய வல்லமை ஒருவரை ஆட்கொண்டதினால் தானே அவ்வித அற்புதங்கள் செய்ய முடிகிறது என்று வாதிடுவர். இதைப்பற்றி நாம் விசுவாசிக்கிற வேதாகமம் என்ன சொல்லுகிறது. என்பதையும் பார்க்க வேண்டாமா?

1. உங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியாகிலும் சொப்பணக்காரனாகிலும் எழும்பி நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றி அவைகளைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் காண்பிப்பேன் என்று குறிப்பாய்ச் சொன்னாலும், அவன் சொன்ன அடையாளமும் அற்புதமும் நடந்தாலும், அந்த தீர்க்கதரிசியானாலும் அந்தச் சொப்பனக்காரனாலும் சொல்லுகிறதைக் கேளாதிருப்பீர்களாக உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்பு கூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு, உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்' உபா 13:1-3

மேற்படி வசனப் பகுதி நமக்குக் கூறுகிறது என்ன? தேவன் இஸ்ரவேல் மக்களை போலி தீர்க்கதரிசிகளை நம்பக் கூடாது என்று எச்சரிக்கிறார். அவர்கள் அற்புத அடையாளம் செய்யக் கூடிய வல்லமையுள்ளவர்களாகக் கூட இருக்கலாம். இருந்தாலும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்கிறது. இப்பொழுது ஒரு கேள்வி: அவர்கள் போலிகளா? அல்லது உண்மையானவர்களா? என்று எப்படி அடையாளம் கண்டு கொள்ளுவது? அப்படிப்பட்ட தீர்க்கதரிசிகள் தேவனுடைய வசனத்துக்கு மாறாக போதிப்பார்களானால், அவர்கள் அற்புத அடையாளங்கள் செய்தாலும் அவர்களை நம்பக் கூடாது, ஏனெனில் அப்படிப்பட்ட வல்லமைகள் எல்லாமே தேவனிடத்திலிருந்துதான் வருகிறது என்று வேதம் சொல்லவில்லை.

2. கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ள தீர்க்கதரிசிகளும் எழும்பிக் கூடுமானால் தெரித்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கக் கூடிய அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்வார்கள் என்று கூறுகிறார் இயேசு மத். 24:24. இந்த எச்சரிக்கை துன்பங்களுக்கும், உபத்திரவங்களுக்கும் மத்தியில் வாழ்ந்து வந்த ஆதிக் கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட கஷ்டமான காலங்களிலும் சோதனை நாட்களிலும்தான் பிசாசு தன் கைவரிசையைக் காட்டி, கள்ளத்

தரிசிகளை எழுப்பி, விசுவாசிகளை ஏமாற்றுவான். நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். ஏனெனில் எல்லா வல்லமையும் தேவனிடத்தில் இருந்தே வருகின்றன என்பது மெய்யல்ல. மருத்துவ விஞ்ஞானம் பெரும் வளர்ச்சியடைந்துள்ள இந்தக் காலத்திலும், தண்ணீர் மந்திரித்துக் கொடுப்பவர்களையும், எந்திரம் கட்டுகிறவர்களையும், தாயத்து விற்கிறவர்களையும் நம்பி அவர்கள் பின்னுல் போகிறவர்களும் இருக்கத் தான் செய்கிறுர்கள்.

3. ''அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும், அடையாளங்களோடும், பொய்யான அற்புதங்களோடும் கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினுல் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். மீட்பைத் தரவல்ல சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமல் போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாயிருக்கும் படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாக கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்குள் அனுப்புவார். 2 தெச 2:9-12.

அப்போஸ்தலன் பவுல் சொல்லுகிறதைக் கவனியுங்கள். கள்ளப் போதகர்கள் அற்புத அடையாளம் செய்யக் கூடிய வல்லமையும் பொய்யான அற்புதங்களைச் செய்கிற ஆற்றலும் உள்ளவர்களாக இருப்பார்கள். நீங்கள் அவைகளையெல்லாம் நம்ப விரும்பினுல் கடவுள் உங்கள் விருப்பப்படி நம்புவதற்கு அனுமதிப்பார். சத்தியத்தை நேசித்து அதை விசுவாசியாமற் போனுல், சாத்தான் பொய்யை நம்பும்படியாகச் செய்து விடுவான். பொய்யான அற்புதங்களைச் செய்து மோசம் போக்கியும் விடுவான். நீங்கள் அற்புத அடையாளங்கள் வேண்டும் என்றுல் கிடைக்கும். ஆனுல் அவைகள் தேவனிடத்திலிருந்து வந்தவை என்று உறுதியாக் கூறமுடியாது. ஏனெனில் பிசாசுக்கும் அந்த வல்லமையுண்டு.

''பிரியமானவர்களே! உலகத்தில் அநேக கள்ளதீர்க்கதரிசிகள் தோன்றி இருப்பதினுல் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனுல் உண்டானவைகளோ, என்று சோதித்தறியுங் கள்'' என்று அப்போஸ்தலன் யோவான் கூறுகிறுர். யோவான் 4:1. தீர்க்கதரிசி, அப்போஸ்தலன் என்று கூறிக் கொண்டு அலையும் நபர்களை நாம் சோதித்து அறிய வேண்டும். பாமரமக்களை ஏமாற்றக் கூடிய சில பொய் அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாக இருந்தாலும் சத்தியத்தைக் கலப்படமாகப் போதிக்கிற பொய்யர்களாகக் கூட இருப்பார்கள். ''உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும் நீ பொல்லாதவர்களைச் சகிக்கக் கூடாமல் இருக்கிற தையும், அப்போஸ்தலர்கள் அல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலர் கள் என்று சொல்லுகிறதை நீ சோதித்து அறிந்து அவர்களைப்

பொய்யர் என்று கண்டறிந்ததையும்......என்று எபேசுப் பட்டணத்துச் சபையாரை வேதாகமம் பாராட்டுகிறது வெளி. 2:2. ஏனெனில் அவர்கள் தங்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக இருந்தார்கள். ஆகவே மெய்யான இரட்சிப்புக்கும், போலி தீர்க்கதரிசிகளுக்கும் சம்பந்தமே இல்லை.

நண்பர்களே, சகோதரிகளே, அற்புத அடையாளங்களைத் தேடி விசுவாசிகள் அலையக்கூடாது என்று தேவன் நம்மை எச்சரிக்கிறார். ஏனெனில் வல்லமைகள் எல்லாமே தேவனிடத்திலிருந்து வருகிறது இல்லை. சாத்தானுக்கும் அற்புத அடையாளங்கள் செய்யக்கூடிய வல்லமை உண்டு. அதை அவன் மக்களை வஞ்சிப்பதற்குப் பயன் படுத்துகிறான். ஆகவே விழிப்புடன் இருக்க வேண்டும்.

ஒருவன் நடப்பிக்கிற அடையாளங்களும், அற்புதங்களும் தேவனிடத்திலிருந்து வந்தவையா? அல்லது பிசாசின் கைச்சரக்கா என்று கண்டு பிடிக்க ஒரு வழி உண்டு. அற்புத அடையாளங்கள் செய்வதாகச் சொல்லும் அந்த நபர்களுடைய போதனைகளைக் கவனியுங்கள். அவர்கள் வேதாகமம் பேசுகிறதைப் பேசுகிறார்களா? அல்லது சத்தியத்தை விட்டு விட்டு கட்டுக்கதைகளைப் பேசி, தங்கள் சுய புராணங்களைப் பாடி மக்களை திசை திருப்புகிறார்களா? என்றுகவனி-யுங்கள். அப்படிச் சோதித்தறிவதற்கு நம்முடைய தகுதியைப் பெரோயா பட்டணத்து விசுவாசிகளின் தரத்துக்கு உயர்த்திக் கொள்ள வேண்டும். ''அந்தப் பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந் தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால்...'' அப். 17:11

ஆம், சகோதரனே, ''சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.'' யோவான் 8:32. அப்பொழுது, வதாகமத்தைக் குறி சொல்லுவதற்கும், மூட நம்பிக்கைகளை வளர்ப்பதற்கும் பயன் படுத்தி தங்களை வளர்த்துக்கொண்டு அலையும் கள்ள போதகர்களை அடையாளங் கண்டு கொள்ள முடியும். வல்லமைகள் எல்லாமே தேவனிடத்திலிருந்து வந்தவைகள் என்று கூறிட முடியாது. ஆனால் சத்தியம் எப்போதும் கடவுளிடமிருந்தே வருகிறது. நீங்கள் எதை நாடுகிறீர்கள்? அற்புத அடையாளம் செய்யும் நபர்களையா? அல்லது இரட்சிப்பதற்கு தேவபலனாய் இருக்கிற சுவிசேஷத்தையா? (ரோமர் 1:16) உங்கள் மாமிசமும் மனசும் விரும்புகிற காரியங்களையா? அல்லது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்து, நித்திய ஜீவனை அடையும் சிறப்பையா? கிறிஸ்துவுக்கும் அவருடைய வசனத்துக்கும் உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுங்கள். அதுவே இறுதி நாளில் நம்மை நியாயம் தீர்க்கும். யோவான் 12:48

E Z செல்வநாயகம்.

**YOUR ATTENTION PLEASE:**

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The Voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9 : 00to 9 : 15 P. M.
Fridays-7 : 45 to 8 : 00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker : Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9 : 00 to 9 : 15 P. M.
Thursdays-9 : 00to 9 : 15 P. M.
Fridays-9 : 00 to 9 : 15 P. M.
Sundays-12 : 45 to 1 : 00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker: Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2 : 30 to 2 : 45 P. M.
Tuesdays-2 : 30 to 2 ; 45 P. M.
Thursdays-2 : 30 to 2 : 45 P. M.
Fridays-2 : 30 to 2 : 45 P. M.
Saturdays-2 : 30 to 2 : 45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker : P. R. Swamy.
All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5 : 30 to 5 : 45 P. M.
Thursdays-6 : 45 to 7 : 00 P M.
Sundays-6 : 45 to 7 : 00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker : P. K. Varghese
All corespondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala)
Tuesdays,3 : 45 to 4 : 00 P. M.
Fridays-3 : 45 to 4 : 00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

இந்த இதழ் தனிச் சுற்றுக்கு மட்டும்.

## வாசக அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

'திருமறை ஆசான்' உங்களுக்கு மாதா மாதம் ஒழுங்காக வந்து கொண்டிருக்கும் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறோம் ஒருவேளை வரத் தவறியிருந்தால் வராத மாதங்களைக் குறிப்பிட்டு தயவு செய்து எங்களுக்கு எழுதுங்கள். அனுப்பித் தருகிறோம்.

மேலும் உங்களுக்கு மாதா மாதம் ஒழுங்காக வந்து கொண்டிருக்கிறது என்றாலும் தயவு செய்து சிரமத்தைப் பாராமல் ஒரு அஞ்சல் அட்டை எழுதி எங்களுக்கு தெரிவியுங்கள்

இந்த வேண்டுகோளை ஏற்று இரண்டில் ஏதாவது ஒன்றைச் செய்யாமல் இருப்பவர்களுக்கு இதழ் அனுப்புவதை நிறுத்தி விடலாமா என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஏனெனில் இதழ் வேண்டுமென்று ஆர்வத்தோடு கேட்கிற அன்பர்களுக்கு அனுப்பித் தர எங்களிடம் அதிகப் பிரதியில்லை.

தயவுசெய்து வருகிறது அல்லது இல்லை என்று இரண்டு வரி எழுதி ஒத்துழைப்புத்தர கிறிஸ்தவ அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

Edited and Published by E. Z. Selvanayagam and Printed by
Sri. Vela E. V. Arasamanickam. at Vela Printers, Erode-638 001.
Phone : 74878

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002.